[1982 ஏப்ரல் 2

கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் திட்டம்.

*வினா எண் —725. திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு கடன் வழங்க ஆயுள் இன்சூரன்ஸ் காப்பகம் மறுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு நேரிடையாக நிதியுதவி அளிக்க 1980-81-ம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மறுத்துவிட்டது. ஆகவே, இத்திட்டத்திற்குத் தேவையான நிதிவசதி தற்போது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடனும் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலமும் பெறப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட அளவிற்கு பொது காப்புறுதிக் கழகம் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் மூலமாக கிராம வீட்டுவசதித் திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்தத் திட்டத்திற்கு கடன் கொடுக்க மறுத்தாலும், மற்ற நிறுவனங்களிடம் இருந்து கடன் பெற்று இந்தத் திட்டம் செயல்பட்டு வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் எவ்வளவு வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981–22 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படவேண்டிய வீடுகள் 40 ஆயிரம். அதற்குத் தேவைப்படும் நிதி ரூபாய் 12 கோடி. இதனை அரசு மற்றும் இதர நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்று மேற்படி திட்டம் செயல்படுத்தப்படும். ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனியாக நிதி உதவிஅளிக்க மறுப்புத் தெரிவித்த போதிலும், கிராமப் பகுதிகளில் 2 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை அரசு தங்குதடையின்றி நிறைவேற்றிவிடும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்குவதற்கும், மற்ற நிறுவனங்கள் கடன் வழங்குவதற்கும் உள்ள வட்டி விகிதத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா? அப்படிக் காப்பீட்டுக் கழகம் கொடுக்கும் வட்டிவிகிதம் குறைவாக இருந்தால், மீண்டும் அதைப் பரிசீலித்து அங்கே இருந்து கடன் பெற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் தருவது $10\frac{1}{2}\%$. மற்றவைகளையப் பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. நாம் போதுமான நிதியை மற்ற நிறுவனங்களிலே இருந்து பெறமுடியும், என்ற காரணத்தால் மீண்டும் காப்பீட்டுக் கழகத்திடம்போய் கோரிக்கை வைத்து அதற்காக நேரத்தை செலவு செய்யவேண்டிய தேவை இல்லை என்று இப்போது கருதுகிறேன்.

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுத்துவதைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண் 726— திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுத்துவதை தடுக்க (Child Labour) அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுக்குமுகமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அ. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டப்பட்ட தொழில் உரிமையாளர்கள் கூட்டத்தில் 10 வயதுக்கு குறைவான சிறார்களை 2.10.76 முதல் வேலைக்கு அமர்த்துவதில்லையென்றும், பணிக்கமர்த்தப்படும் சிறாரைப் பற்றிய பட்டியலை தீப்பெட்டித் தொழிற்சாலை சமர்ப்பிக்கும் என்றும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், 1938 ஆம் ஆண்டு சிறார்களை வேலைக்கு அமர்த்தும் சட்டம் ஆகியவற்றின் கீழ் விரிவான சோதனைகளை தொழிற்சாலை ஆய்வாளர் நடத்துவர் என்றும், முரண்பாடுகள் இருப்பின் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆ. சிவகாசி நகராட்சி எல்லைக்கு வெளியே 5 கிலோமீட்டர் தொலைவிற்குள் புதிதாக தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இ. சிறார் வேலை பிரச்னைகள் பற்றி பரிந்துரைகள் செய்ய இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழுவும் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் மாநில மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஈ. நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியில் பாதியளவு மட்டுமே சிறார்களுக்கு அளிக்கப்படவேண்டும் எனும் விதியை நீக்கலாமென அரசு கருதுகிறது. தொழிலாளர் நல ஆணையர் இதுபற்றி பரிசீலித்து வருகிறார்.